
SALCO
South Asian Legal Clinic of Ontario

# நிரந்தரக் குடியுரிமைக்குரிய மனிதாபிமானம் மற்றும் கருணை (H&C)
## அடிப்படையிலான விண்ணப்பங்கள்



**H&C விண்ணப்பம் என்றால் என்ன?**

H&C விண்ணப்பம் என்பது மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையில் கனடாவிற்குள்ளேயே இருந்தவாறு நிரந்தரக் குடியிருப்புக்கு (PR) விண்ணப்பிக்க அனுமதிக்கும் விதிவிலக்கான ஒரு நடவடிக்கையாகும்.

பொதுவாக, நீங்கள் கனடாவிற்கு உள்ளே இருந்து விண்ணப்பிக்க அனுமதிக்கும் விண்ணப்ப முறைமைகளில் ஒன்றிற்குத் தகுதியுடையவராக இருந்தாலன்றிக், கனடாவிற்கு வெளியே இருந்துதான் நீங்கள் PR க்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று குடிவரவுச் சட்டம் கூறுகின்றது. விதிவிலக்கான சில சந்தர்ப்பங்களில், நீங்கள் தற்காலிகமாக அல்லது அந்தஸ்து இல்லாமல் இருந்தால், கனடாவிற்குள் இருந்து PR பெறவேண்டியதைத் தவிர வேறு வழி இல்லாமலும், அத்துடன், நீங்கள் விண்ணப்பிப்பதற்காக உங்கள் சொந்த நாட்டிற்குச் செல்லும்போது பல இடையூறுகளைச் சந்திக்க நேரிடும் நிலையும் காணப்பட்டால், நீங்கள் H&C விண்ணப்பம் மூலம் PR ஐப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கலாம்.

குறிப்பு: அந்தஸ்து  இல்லாத நிலையில் H&C க்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம் என்பதால், உங்கள் H&C பரிசீலிக்கப்படும்போது நீங்கள் தொடர்ந்தும் கனடாவில் தங்கியிருக்கலாம் என்று அர்த்தம் இல்லை. நீங்கள் எந்நேரமும் கனடாவிலிருந்து வெளியேற்றப்படலாம், ஆனால் உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டவுடன் நீங்கள் திரும்பவும் வரக்கூடியதாக இருக்கும்.

SALCO
South Asian Legal Clinic of Ontario

## யார் விண்ணப்பிக்கலாம்?

பின்வரும் நிலைமைகளின் கீழ் மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையிலான நிரந்தரக் குடியுரிமைக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்:

- நிரந்தர வதிவாளர் அல்லது பிரஜாவுரிமை அந்தஸ்து இல்லாமல் கனடாவில் வசிப்பவர்கள்
- கனடாவிற்குள் இருந்து நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கக் குடிவரவுச் சட்டத்தின் இயல்பான கோரிக்கைகளில் இருந்து விலக்குத் தேவைப்படுபவர்கள்
- பின்வரும் திட்டங்கள் மூலம் கனடாவிற்குள் இருந்து நிரந்தரக் குடியிருப்புக்கு விண்ணப்பிக்க முடியயாதவர்கள்:
    - o வாழ்க்கைத் துணைவர் அல்லது பொதுச்சட்டப்படி கூடி வாழ்பவருக்கான பொறுப்பேற்றல் திட்டம் (Spouse or Common-Law Partner Sponsorship) ;
    - o பராமரிப்பாளர் திட்டங்கள்
    - o அகதிகள்;
    - o தற்காலிக வதிவிட அனுமதி (TRP)
    - o பொருளாதார வகுப்பு உதாரணமாக. திறனுள்ள தொழிலாளி, கனடிய அனுபவ வகுப்பு, மாகாண நியமனம்

## H&C விண்ணப்பத்தில் கருத்தில் கொள்ளப்படும் மனிதாபிமானம் மற்றும் கருணை ரீதியான சில அடிப்படைக் காரணங்கள் யாவை?

PR க்கு விண்ணப்பிப்பதற்காக உங்கள் சொந்த நாட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தால், நீங்கள் சந்திக்க நேரிடும் இடையூறுகளின் அளவையும், நீங்கள் கனடாவில் எவ்வளவு உறுதியாக நிலைபெற்றிருக்கிறீர்கள் என்பதையும்,

H&C விண்ணப்பத்தை மதிப்பிடும்போது, ஒரு அதிகாரி பொதுவாகக் கவனத்திற் கொள்வார்.

**கவனத்திலெடுக்கப்படும் பொதுவான காரணிகள்:**

• நீங்கள் கனடாவில் எவ்வளவு உறுதியாக நிலைபெற்றிருக்கிறீர்கள் என்பதற்கு உதாரணங்கள் ஒரு வேலையில் இருத்தல், கனேடியக் கல்வி ஒன்று, ஒரு வீடு வைத்திருத்தல், ஒரு சமூகத்தின் பகுதியாக இருத்தல், பல ஆண்டுகளாகக் கனடாவில் வசித்தல் மற்றும்/அல்லது மத அமைப்பு ஒன்றின் ஒரு உறுப்பினராக இருத்தல்

• கனடாவிலுள்ள உங்கள் உறவுகள் உதாரணமாகக்  கனடாவில் ஒரு பிள்ளை, குடும்பம் மற்றும்/அல்லது நண்பர்கள் ஆகியோர் இருத்தல்

• பாதிக்கப்படும் பிள்ளைகளின் நலன்கள் (H&C விண்ணப்பங்கள் பலவற்றில் இது முக்கியமாகக் கவனத்திற் கொள்ளப்படும் ஒரு விடயமாகும்)

• மருத்துவ நிலைமைகள் மற்றும் அதற்குரிய சிகிச்சை உங்கள் சொந்த நாட்டில் கிடைக்குமா என்பது

• குடும்ப வன்முறை /நெருங்கிய துணைவரின் வன்முறை/குடும்பத்தில் துன்புறுத்தல்

• உறவினர் ஒருவரிடமிருந்து நீங்கள் பிரிந்ததனால் ஏற்பட்ட பின்விளைவுகள்

• போர், இயற்கைப் பேரழிவுகள், அரசியல் ஸ்திரமின்மை, வன்முறை, பாகுபாடு, வேலையின்மை போன்ற உங்கள் பிறந்த நாட்டின் நிலைமைகள். நீங்கள் அகதிக் கோரிக்கையைச் செய்து, உங்கள் அகதிக் கோரிக்கையில் நீங்கள் முன்வைத்த வாதங்களில் தோல்வியுற்றால், அன்றிலிருந்து புதியதாகவோ அல்லது வித்தியாசமாகவோ ஏதாவது நடந்தாலன்றி, உங்கள் H&C விண்ணப்பத்தில் உள்ள அந்தப் புள்ளிகள் குடிவரவு அதிகாரியால் பரிசீலிக்கப்படமாட்டாது.

குறிப்பு: துன்புறுத்தல் அல்லது உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற பயம் காரணமாக உங்களால் சொந்த நாட்டிற்குத் திரும்ப முடியாவிட்டால், H&C அடிப்படையில் விண்ணப்பிப்பதற்குப் பதிலாக அகதிப் பாதுகாப்பை நாட வேண்டும். உங்களுக்கு எந்தத் தெரிவு  சிறந்தது என்பதைக் கண்டுபிடிக்க ஒரு வழக்கறிஞரிடம் பேசுங்கள்.

**பின்வரும் நிலைமைகளில் நீங்கள் H&Cக்கு விண்ணப்பிக்க முடியாது:**

- நீங்கள் ஏற்கனவே கனடாவில் நிரந்தர வதிவாளர் அல்லது பிரஜையாக இருந்தால்
- உங்களுடைய அகதிக்கோரிக்கை ஒன்று  நிலுவையில் இருந்தால்
- உங்கள் அகதிக் கோரிக்கை விசாரணைக்குச் செல்லத் தகுதியற்றதாயும் வெளியேற்றலுக்கு – முன்னரான  உங்கள் இடர் மதிப்பீட்டு (PRRA) விண்ணப்பம் ஒன்று நிலுவையிலும் இருந்தால்
- உங்கள் அகதிக் கோரிக்கையில் இறுதியாக முடிவு எடுத்து 12 மாதங்கள் பூர்த்தியாகாதிருத்தல் (இது 12 மாதத் தடுப்பு (bar) என அறியப்படுகிறது. உங்கள்  H&C விண்ணப்பம் மருத்துவ காரணங்கள் அல்லது பிள்ளைகளின் சிறந்த நலன்களுக்கான அடிப்படையில் இருந்தால், 12 மாதத் தடுப்பில் இருந்து விதிவிலக்குக்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம்).

**விண்ணப்பிப்பது எப்படி:**

மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையில் (H&C) கனடாவிற்குள் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பம் செய்வதற்கு நீங்கள் இணையத்தளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் பின்வருவனவற்றுக்கு வழிநடத்தப்படுவீர்கள்:

- IRCC இணையத்தளத்தில் காணப்படும் கனடாவிற்கான

SALCO
South Asian Legal Clinic of Ontario

பொதுவான விண்ணப்பப் படிவத்தை (IMM 0008) பூர்த்தி செய்யவும்
• IRCCக்குத் தேவைப்படும் ஏனைய படிவங்களைப் பூர்த்தி செய்யவும்
• IRCCக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் சேகரிக்கவும் (IRCC இணையத்  தளத்தில் சரிபார்ப்புப் பட்டியலைக் காணலாம்)
• IRCC உங்கள் விண்ணப்பத்தை ஏன் ஏற்க வேண்டும் என்பதை விளக்கவும் அத்துடன், உங்கள் விண்ணப்பத்தை ஆதரிக்கும் சான்றுகளை அதனுடன் சேர்க்க வேண்டும்.

**சான்றுகளில்  அடங்குபவை:**

- o உங்கள் கதையை விளக்கும் உங்கள் சொந்தக் கடிதம் அல்லது உறுதிமொழி
- o கனடாவில் உங்கள் வாழ்க்கை மற்றும் உறவுகளை ஆவணப்படுத்தும் புகைப்படங்கள்
- o குடும்பம், நண்பர்கள், உங்கள் மருத்துவர் மற்றும் சமூக உறுப்பினர்கள் போன்றவர்களிடமிருந்து ஆதரவுக் கடிதங்கள்
- o மருத்துவரின் அறிக்கைகள்
- o உங்கள் நாட்டின் நிலைமைகள் பற்றிய கட்டுரைகள் மற்றும் செய்திகள் போன்ற ஆவணங்கள்
- o உங்கள் பிள்ளை தொடர்பான குடும்ப நீதிமன்ற ஆவணங்கள், மற்றும் கனடாவில் உங்கள் பிள்ளையின் நிலையிருப்பையும்  கனடாவில் தங்குவது அவர்களுக்கு ஏன் சிறந்ததாக இருக்கும் என்பதனையும் ஆதரிக்கும் பிற சான்றுகள்

• விண்ணப்பச் செயலாக்கக் கட்டணத்தைச் செலுத்தவும்

SALCO
South Asian Legal Clinic of Ontario

**விண்ணப்பக் கட்டணங்கள்:**

• உங்கள் விண்ணப்பச் செயலாக்கக் கட்டணம்
• உங்கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்பட்டுள்ள பிறருக்கான விண்ணப்பச் செயலாக்கக் கட்டணங்கள் (உதாரணமாக: வாழ்க்கைத் துணைவர்/கூட வாழ்பவர், “சார்ந்திருக்கும்” பிள்ளைகள் – "சார்ந்திருக்கும்" பிள்ளைகள் யார் என்பதைக் குடியேற்றச் சட்டம் உங்களுக்குச் சொல்லும் )
• உங்களுக்கும் உங்கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்பட்டுள்ள மற்றவர்களுக்கும் உரிய நிரந்தர வதிவிட உரிமைக் கட்டணம் (Right of Permanent Residence fee) (நீங்கள் விண்ணப்பிக்கும்போது அல்லது அதற்குப் பிறகு செலுத்தலாம்)

**குறிப்பு:** PR விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தைச் செயலாக்குவதற்கு விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கும்போது விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தவில்லை என்றால், உங்கள் விண்ணப்பம் திரும்பப் பெறப்படக்கூடும். நீங்கள் விண்ணப்பிக்கும்போது அல்லது அதற்குப் பிறகு, IRCC ஆல் கோரப்படும்போது நிரந்தர வதிவிட உரிமைக்கான கட்டணத்தைச் செலுத்தலாம்.

**வேறு குடிவரவு விண்ணப்பங்களில் நான் மனிதாபிமானம் மற்றும் கருணை ரீதியான வாதங்களைப் பயன்படுத்தலாமா?**

வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவரின் பொறுப்பேற்றல் திட்டம் அல்லது பொருளாதார வகுப்புகளில் ஒன்று போன்ற வேறு விண்ணப்பங்களில் H&C காரணிகளைக் கருத்திற் கொள்ளுமாறு நீங்கள் IRCCயிடம் கேட்கலாம். இது பொதுவாகக் கனடாவிற்கு வர விரும்பும்போது செய்யப்படுகின்றது. அவர்களுக்குக் குற்றவியல் தொடர்பான வரலாறு இருந்தால், அது அனுமதிக்கப்படமாட்டாது.